## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 48. ஸ்ரீ த்ரிபுராந்தக தாஸ்

---

லௌகீக வாழ்க்கையின் போகங்களைத் துறக்க மிகவும் தைரியமும் மிக மிக ஆழ்ந்த ஆன்மீகப் பயிற்சிகளும் தேவை. மிகவும் உயர்ந்த நிலையில் பதவியில் பணவசதியில் இருப்போர் அவற்றை விட்டுவிட்டு மிகவும் எளிய வாழ்க்கை வாழ்வதை மிகவும் சிறந்த சாதனை என வரலாறும் புகழ்கிறது.காந்தி, பாரதியார், அரவிந்தர், புத்தர் போன்றவர்கள் அப்படி வாழ்ந்தனர்.

ராமனைப் போன்றவர்கள் சமூஹ நலனுக்கும் தன் முக்திக்கும் வேண்டிய மிக இஷ்டமான அந்தரங்க வாழ்க்கையை விட்டுக் கொடுத்தனர்.

த்ரிபுராந்தகர் பற்றுக்களை அறுக்கும் பயிற்சியில் ஒரு கட்டத்தில் தன் உயர்ந்த அரச போக வாழ்வை இழக்க முற்படுகிறார்.ஆனால் இங்கே ஆடம்பரத்தையும் ஆன்மீகத்துடன் பிணைத்துக் கொள்ளும் அன்பர்கள் பலரையும் காண்கிறோம்.

**மதுரா மந்த்ரியின் ராஜினாமா**

த்ரிபுராந்தகர் மதுராவின் அமைச்சர். மிகவும் பக்தியும் ஸ்ரத்தையும் கொண்ட ஆன்மீகவாதி.ஒரு கட்டத்தில் voluntary retirement பெற்றுக் கொண்டு வ்ருந்தாவனத்தில் settle ஆகிவிடுகிறார். இன்றும் ஒரு வயதுக்கு மேல் திவ்ய ஸ்தலங்களில் வீடு வாங்கிக் கொண்டு வாழும் மக்களைக் காண்கிறோம்.அவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு சௌகர்யம் ஏற்படுத்திய பின் வருவர்.இவரோ அன்றாட வாழ்க்கைத் தேவைக்கு உஞ்ஜ விருத்தி செய்யஅ முடிவு செய்து விடுகிறார்.இத்தகைய வாழ்க்கையை ஏற்றுக் கொண்ட அவர் மனைவியை மிகவும் வியக்கிறோம்!

மன்னர் அளித்த அனைத்து சொத்துக்களையும் ஏழைகளுக்கு தானம் செய்து விட்டு வ்ருந்தானவம் வந்தார் இவர். மிக அற்புதமான பஜனை கலந்த நாமாவளி ஆன்மீக ப்ரச்சாராம் செய்து, அதன் மூலம் வந்த பொருட்களைக் கொண்டு தானும் உண்டு, பாகவதக் கைங்கர்யமும் செய்தார் த்ரிபுராந்தகர்.என்னே மன பக்குவம்?

நாட்டை வழிநடத்தும் மந்த்ரியின் திடீர் மாற்றம் மக்களை வியக்கச் செய்தது.ஆன்மீகத்தில் கவனம் செய்யவும் வைத்தது.ஆனால் அதே வேளைப் பலர் இவரைக் கேலியும் பேசினர்.இது உலக இயற்கை தானே?

**ஜென்மாஷ்டமி ஆசை**

க்ருஷ்ண ஜென்மாஷ்டமி நெருங்கும் வேளை.மந்த்ரியாய் இருந்த அவருள்

மதுராவில் நிகழும் அழகிய போகம் மிக்க பூஜைகளும் கொண்டாட்டங்களும் கண் முன் வர, வ்ருந்தாவன நாதனுக்கு அழகிய பட்டு வஸ்த்ரம் சார்த்தி மகிழ ஆசை ஏற்பட்டது.

**பானை போய் பருத்தி வந்த கதை**

இதை அறிந்த மனைவி அவருக்கு எதார்த்தத்தை உணர்த்தினார். அப்போது வீட்டில் இருந்த ஒரு பழைய வெங்கலப்பானையை விற்று அதில் கிடைத்த காசுக்கு அழகிய பருத்தி வஸ்த்ரம் வாங்கினார்.

ஜென்மாஷ்டமிக்கு முன் தினம் கோயிலுக்குச் சென்ற இவர் பூஜாரியிடம் தன் பருத்தி வஸ்த்ரத்தை அளித்து மறுநாள் இறைவன் மீது போட்டு எடுக்கும் படி வேண்டிக் கொண்டார்.பணமும் அந்தஸ்தும் பகட்டும் ஆடும் காலத்தில் பருத்திக்கு மதிப்பு உண்டோ? தலைமைப் பூஜாரி அவ்வாடையை வாங்கி அதை மதிக்காமல் ஒரு ஓரத்தில் தூக்கி வீசினார்.

மறுநாள் ஜென்மாஷ்டமி விழாவில் இறைவனுக்கு அற்புதமான பட்டு வஸ்த்ரங்களைச் சார்த்தினர். அவ்வப்போது விளக்குத் துடைக்கவும் கையைத் துடைக்கவும் த்ரிபுராந்தகரின் பருத்தி ஆடையைப் பயன்படுத்தினர் அர்ச்சகர்கள்.[இன்றும் கோயில்களில் எத்தனை எத்தனை அட்டீழியங்கள்!?]

இதைக் கண்ட அவர் மனம் கலங்கினார்.

"***தாயே ஸ்ரீராதே! எல்லாமே லக்ஷ்மி என்ற தத்துவத்தை ஏன் இவர்கள் உணரவில்லை? கோயில்கள் எளிமையை போதிக்கும் இடம் அன்றோ? பருத்தி ஆடையை இவ்வாறு பயன்படுத்தலாமா? சரி இவர்தம் கைகளைத் துடைக்கும் பாக்யம் அது பெற்றதே! அதுவே போதும்!***" என்று கூறியபடி வீடு சேர்ந்து உறங்கினார்.

**குளிர் தாங்காத ராதாக்ருஷ்ணா**

அர்த்த ஜாமப் பூஜை ஆரம்பம் ஆன போது ஒரு ஸ்ரத்தையான பூஜாரிக்கு இறைவனும் ராதையும் குளிரில் நடுங்குவது தெரியவருகிறது.எதை எதையோ செய்தும் நடுக்கம் தீரவில்லை.அப்போது அவர் தம் விழிப்புணர்வில் ஏதாவது தவறு நேர்ந்ததோ என்று த்யானிக்கையில் த்ரிபுராந்தகர் மனம் கலங்கிய சத்யம் புலப்பட, அப்போதே அவரது கசங்கிய ஆடையை எடுத்து விக்ரஹங்களைப் போர்த்திட குளிர் அடங்கியது.

இதை மறுநாள் அவர் மக்களுக்கு வெளியிட, த்ரிபுராந்தகர் அதைக் கேட்டு மிகவும்

பவ்யமாக இறைவனுக்கும் தேவிக்கும் நன்றி கூறித் தன் உயர்ந்த பஜனையை ஆரம்பித்து உஞ்சவிருத்திக்குப் புறப்பட்டார்.

பக்தியில் அடக்கம், எளிமை இவை மிக முக்கியம். அவை சத்யமாக இருக்கும் போது இறைவன் அதில் மிளிர்வான்.

ஹரி ஓம்!